# தமிழ் மொழியின் சொல் வளமையும் புதுமையும் (திருக்குறளை முன்வைத்து)

*முனைவர் க. சித்ரா*
உதவிப்பேராசிரியர் (தமிழ்)
எஸ்.ஆர்.எம்.அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவனம்
அறிவியல் மற்றும் மானுடவியல் புலம், சென்னை
https://doi.org/10.5281/zenodo.15572424

***ஆய்வுச் சுருக்கம்***
*மொழியில் அடிப்படைக்கூறு ஒலிகள். ஒலிகளின் வரி வடிவமாகிய எழுத்துக்களும் அவற்றிலிருந்து உருவாகும் சொற்களும் கருத்துப் பரிமாற்றத்திற்கு உதவுவன. உலகின் எந்த ஒருமொழியும் சொற்கள் மற்றும் ஒலிகளால் அடையாளம் காணப்படுகிறது. பன்னெடுங்காலமாக வழங்கும் ஒரு மொழியில் சொற்களில் மாற்றங்களையும் புதுமைகளையும் காலந்தோறும் காணலாம். சொற்களின் இயக்கத்தில் ஏற்படும் மாற்றங்களை அறிவது மொழியை மிகச் சரியாகக் கையாள உதவும். இலக்கண நூலார், மொழியியலார், அகராதியியலார் உள்ளிட்ட துறையினர் காலந்தோறும் மொழி குறித்து மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் ஆராய்ந்து பதிவிட்டு வருகின்றனர். அவ்வகையில் சொல்லுக்கும் பொருளுக்கும் இடையிலான உறவுகளும் காலந்தோறும் பல மாற்றங்களைப் பெறுகின்றது. சொற்பொருள் உறவுநிலைகளை இலக்கணம், அகராதியியல், மொழியியல் ஆகிய கோணங்களில் ஆராயும் போது அவற்றை மேலும் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகின்றது. அம்முயற்சியின் முதல் படியாக ஒரு பொருள் குறித்த பல சொற்களை (Synonyms) மட்டும் அடிப்படையாகக் கொண்டு இச்சொல்லாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மொழியில் சொற்களின் எண்ணிக்கை அளவிடமுடியாதது. எல்லை கருதி திருக்குறள் நூலில் இடம்பெற்றுள்ள ஒரு பொருட் பல சொற்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு இச்சொல்லாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. திருக்குறளில் இச்சொற்கள் எங்ஙனம் அறக்கருத்துகளைப் பதிவிட உதவுகின்றன என்பதையும் பொருள் உணர்த்துவதில் இச்சொற்களின் பொருண்மைநிலைகளையும் புதுமைகளையும் இக்கட்டுரை பதிவுசெய்கின்றது.*

***திறவுச்சொற்கள்:*** *சொல்வகைகள், மரபிலக்கணங்களில் சொல் பாகுபாடு, உரிச்சொற்கள், அகராதியியல் சொல் பாகுபாடு, சொற்பொருண்மை, ஒருபொருட் பன்மொழிகள், பலபொருள் ஒரு சொல், பொருட்பெயர்கள், தலைமைப் பெயர்கள், சொல் ஆளுமை, பயன்பாட்டு எல்லை.*

## பொருள் தொடர்பில் சொற்கள்

ஒரு மொழியில் வழங்கப்படும் அனைத்துச் சொற்களும் பொருள் குறித்தே வழங்குகின்றன. இதனை எல்லாச்சொல்லும் பொருள் குறித்தனவே (தொல். சொல். பெயரியல், நூ.1) என்று தொல்காப்பியம் நிறுவுகின்றது. சொற்கள் அனைத்தும் இருவகையான பொருள்களைக் கொண்டுள்ளன. தமிழ் மொழியில் வழங்கப்படும் ஒவ்வொரு சொல்லும் சொற்பொருள், இலக்கணப் பொருள் என இருவகைப் பொருளை உணர்த்தவல்லது.

*பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்*
*சொல்லினாகும் என்மனார் புலவர்.*
*(தொல். சொல். பெயரியல், நூ.2)*

என்ற தொல்காப்பிய நூற்பா வாயிலாக இதனை அறிய முடிகின்றது. சொற்பொருளை “Lexical meaning’ என்றும் இலக்கணப் பொருளை Grammatical meaning என்றும் அகராதியியலார் வழங்குவர்.

உதாரணமாக மலை என்ற சொல்லிற்கு உயர்ந்த குன்று (mountain) என்பது சொற்பொருளானால் இடுகுறிப்பெயர் என்பது இலக்கணப்பொருள் ஆகும். பொருள் தொடர்பில் சொற்களை இருகோணங்களில் பிரித்தறிய முடிகின்றது.

- இலக்கண அடிப்படையில் சொற்கள்
- அகராதியியல் அடிப்படையில் சொற்கள்

### மரபிலக்கணங்கள் காட்டும் சொல் வகை

தொல்காப்பியம் நன்னூல் உள்ளிட்ட இலக்கணநூல்கள் சொற்களை இலக்கணம் மற்றும் வழக்கு அடிப்படையில் வகைப் படுத்தியுள்ளன. இலக்கண நோக்கில் சொற்களை பெயர்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகைப்படுத்துவர்.

### பெயர்சொல்

இடுகுறியாகவும் காரணம் கருதியும் உயர்திணை, அஃறிணை விரவுத்திணைக்கு உரியனவாக ஒன்றன் பெயரைக்குறித்து வழங்கப்படுபவை பெயர்ச்சொற்கள். இவை வேற்றுமை உருபுகளை ஏற்றும்,காலம் காட்டு பண்பு இன்றியும் (வினையாலணையும் பெயர் தவிர்த்து) வழங்கப்பெறும். இவை பொருட்பெயர். இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் என்று மேலும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### உரிச்சொல்

உலகின் எந்த ஒரு பருப்பொருளுக்கும் ஏனைய உயிர்களுக்கும் ஒரே ஒரு பண்பு மட்டுமே உண்டு என்று கூற இயலாது. அவ்வகையில் ஒரு பொருளின் பல பண்புகள் அறியப்படும் நிலையில் அப்பண்பு குறித்த சொற்கள் பல உருவாக்கப்படுகின்றன. இத்தயை சொற்களை,

**பல்வகைப் பண்பும் பகர்பெயர் ஆகி**
**ஒருகுணம் பலகுணம் தழுவிப் பெயர்வினை**
**ஒருவா செய்யுட்கு உரியன உரிச்சொல்**
**- நன்.உரி.நூ.1**

என்று நன்னூல் குறிப்பிடுகின்றது. இவ்வுரிச் சொற்கள் ஒருகுணம் நழுவிய பல உரிச் சொல், பல குணம் தழுவிய ஓர் உரிச்சொல் என இருவகைப்படும்.

### வழக்கு அடிப்படையில் சொல் பாகுபாடு

இலக்கியம் படைப்போர் தம் படைப்புகளில் வழங்கும் சொற்களை மரபிலக்கண நூல்கள் நான்கு வகைப்படுத்தியுள்ளன. அவையாவன,

- இயற்சொல்
- திசைச்சொல்
- திரிசொல்
- வடசொல்

இவ்வாறு மரபிலக்கண நூல்கள் வழி சொற்பாகுபாட்டை ஆராயும் போது சொற்பொருளின் பன்முகத்தன்மை குறித்து அறிய முடிகிறது.

### அகராதியியல் நோக்கில் சொற்கள்

இலக்கியங்களைப் படிக்கும் போது ஏற்படும் ஐயங்களைத் தீர்ப்பதற்கு நோக்கீட்டு நூல்கள் பயன்படுகின்றன. களஞ்சியங்கள் (encyclopaedia) அகராதிகள் (dictionary) சொல்லடைவு (Index) (Glossary) (concordance) பொருள் அடைவு (compendium) சொற் களஞ்சியம் (Thesaurus) என்று நோக்கீட்டு நூல்கள் ஏழுவகைப்படும். இவற்றுள் அகராதிகள் சொற்களுக்கு அகர வரிசையில் பொருள் தருவன ஆகும். அகராதிகளைப் பற்றிய கல்வியை அகராதியியல் என வழங்குவர். பயன்பாட்டு மொழியியலின் ஒரு பிரிவாக விளங்கும் அகராதியியல் துறை (lexicology) சொற்பொருள் விளக்கும் பணியை மையமிட்டு செயல்படுவதால் சொற்பொருள் குறித்தவிரிவான வழங்குகின்றது.

செய்திகளை அகராதியியல் நோக்கில் சொற்கள் மூன்று உள்ளடக்கக் கூறுகளைக் கொண்டனவாக வரையறுக்கப் பட்டுள்ளன. அவையாவன,

- வடிவம்
- இலக்கணம்
- பொருள்

சொல்லமைப்பில் இக்கூறுகள் இன்றியமை யாததாகக் கருதப்படுகின்றன. அகராதியில் சொற்களுக்குப் பொருள் வளக்கம் தரும் போது இம்மூன்று கூறுகளும் அகராதியி யலாளரால் ஆராயப்படுகின்றன. மேலும் பொருள் தொடர்பில் அனைத்துச்சொற்களும் இலக்கணப் பொருள் சொற்பொருள் என்ற இருவகையான பொருள் நிலைகளை உடையன என்பது மரபிலக்கண நூல்கள் தரும் விளக்கமாகும். ஆனால் அகராதியியலார் கூற்றுப்படி சொற்கள் சொற்பொருள். இலக்கணப்பொருள், வாக்கியப்பொருள் என்ற மூவகையான பொருள் நிலைகளை உடையன. வாக்கியத்தின் பொருள் அதில் அடங்கியுள்ள சொற்களின் பொருளிலும் வரிசையிலும் அடங்கியுள்ளது. இலக்கணப்பொருள் வாக்கியப் பொருளைச்சார்ந்தே இயங்குகின்றது. எனவே வாக்கியப்பொருள் என்பது சொற்பொருள் மற்றும் இலக்கியப்பொருள் அடங்கியது. இம்மூன்றும் ஒன்றையொன்று சார்ந்தே இயங்குகின்றன[1]. (1. எச். சித்திரபுத்திரன் - தமிழ்ச்சொற்பொருண்மையியல் - ப.36)

எல்லாச்சொல்லும் பொருள் குறித்து வரும் என இலக்கண நூல்கள் விளக்கும் நிலையில் அகராதியியலார் நோக்கில் சொற்கள் பொருள் கொண்டனவாகவும் (having meaning) பொருள் சுட்டுவனவாகவும் (Refer meaning) விளக்கப் படுகின்றன. சான்றாக, வானம், கடல், இலை போன்ற சொற்கள் கண்ணால் பார்க்கக்கூடிய நிலையிலுள்ள பொருள்களைச் சுட்டி விளக்குகின்றன. அமைதி, பணிவு கனவு போன்ற சொற்கள் காட்சிக்கு இடம் அளிக்காத அருவப் பொருள்களைக் கொண்டனவாக விளங்குகின்றன.

ஒரு மொழியிலுள்ள சொற்களுக்குப் பொருள் விளக்கும் பொருட்டு அம்மொழியிலுள்ள பிற சொற்களையே அகராதியியலார் கருவியாகக் கொள்கின்றனர். ஒருமொழியின் எச்சொல்லுக்கு அகராதி பொருள் விளக்கம் தருகின்றதோ அச்சொல்லானது தலைச்சொல் அல்லது பதிவுச்சொல் எனப்படும். இத்தலைச் சொல்லானது வடிவம் இலக்கணம் பொருள் ஆகிய சொற்கூறுகளுக்கு உட்படுத்தி ஆராய்வதுடன் அதற்கு பொருள் விளக்கம் தரவல்ல சொற்களையும் (இணைச்சொல் (equivalents) எதிர்ச்சொல் (antonym) ஒரு பொருள் பல சொல் (synonym) பல பொருள் ஒரு சொல் (polysem) என அகராதியியலார் வகைப்படுத்தி அறிகின்றனர். அவ்வகையில் அகராதியியலாரின் சொல் பாகுபாடு இலக்கண நூல்கள் காட்டும் சொல்பாகுபாட்டிலிருந்து வேறுபடுகின்றது.

### அகராதியியல் வழி சொல்பாகுபாடு

ஒரு மொழியைச் செம்மையாகக் கையாள உதவும் வகையில் இலக்கண நூல்கள் அம்மொழியின் சொற்களை இலக்கண அடிப்படையிலும் இலக்கிய அடிப்படையிலும் வகைப்படுத்தியுள்ளன. மொழியை ஓரளவு அறிந்தவரும் பயன்படுத்தும் வகையில் அகராதிகள் அமைகின்றன. இத்தயை அகராதிகளைப் படைத்தளிக்கும் அகராதியியலார் இரு அடிப்படைகளில் சொற்களைப் பாகுபடுத்துகின்றனர். அவையாவன;

**சொல் வடிவம் அடிப்படையிலான பாகுபாடு**
**சொல் பொருள் உறவு அடிப்படையிலான பாகுபாடு**

### சொல்வடிவம் அடிப்படையிலான பாகுபாடு

சொல்லின் வடிவம், இலக்கணம், பயன்பாடு இவற்றின் அடிப்படையில் சொற்களை அகராதியியலார் நான்கு வகைப்படுத்தியுள்ளனர். அவையாவன;

- வரிவடிவச் சொல்
- ஒலிவடிவச்சொல்
- சொல் வடிவுகள் (word paradigms)
- அகராதிச் சொல் (lexemes)

**சொற்பொருள் உறவு அடிப்படையிலான பாகுபாடு**

*சொல்லுக்கும் பொருளுக்கும் இடையிலான உறவு அடிப்படையில் சொற்களை அகராதியியலார் மேலும் நான்கு அடிப்படையில் வகைப் படுத்துகின்றனர்.*

*அவை:*

- *ஒருபொருள் பலசொல்*
- *பல பொருள் ஒருசொல்*
- *எதிர்ச்சொல்*
- *மீச்சொல்-கீழ்ச்சொல்*
- *ஒருபொருள் பல சொல்*

*ஒரு மொழியின் சொல் வளர்ச்சியைக் காட்டுவனவாக ஒருபொருளைக்குறிக்க பல சொற்கள் பெருகுகின்றன. சான்றாக மேகம் என்ற ஒருபொருளைக் குறிக்க மஞ்சு, கார், முகில் போன்ற பல சொற்கள் இலக்கியங்களில் வழங்குவதைக் குறிப்பிடலாம். இச்சொற்கள் ஒரே பொருளைக் குறித்து வந்தாலும் அவற்றினிடையே சில நுணுக்கமான பொருள் வேறுபாடுகள் உள்ளன. எனவே இச்சொற்கள் குறித்து மேலும் அறிவது அவசியமாகின்றது.*

**பல பொருள் ஒருசொல்**

*ஒரே சொல் காலப் போக்கில் பல வேறுபட்ட பொருள்களில் வழங்கும் நிலை தமிழ் மொழியில் காணப்படுகின்றது. ஒரு சொல்லுக்கு தொடக்கத்தில் அமைந்த பொருளே இன்று வரையில் வழங்க வேண்டும் என்ற நிலை எந்த மொழியிலும் இல்லை[2] (2. மு. வரதராசன் - மொழிநூல் - ப. 68) இதனால் பல பொருள் என்ற சொல்வகை பொருள் தொடர்பில் தனித்து ஆராயப் படுகின்றது.*

**எதிர்ச்சொற்கள்**

*இரு சொற்களுக்கு இடையே எதிரெதிரான பொருள் உறவு காணப்படும் நிலையில் எதிர்ச்சொற்கள் என்ற சொல்பாகுபாடு தோன்றுகிறது. சான்றாக, இரவு பகல், பிறப்பு-இறப்பு போன்ற சொற்கள் எதிரெதிரான பொருள் உறவு கொண்டுள்ளன.*

**மீச்சொல்-கீழ்ச்சொல்**

*ஒருமொழியில் சில சொற்கள் வேறு சில சொற்களின் பொருளை உள்ளடக்கியதாகக் காணப்படும். அவ்வாறான சொற்களை அகராதியியலார் மீச்சொல் கீழ்ச்சொல் என்று பாகுபடுத்துகின்றனர்.*

**மீச்சொல் கீழ்ச்சொல்**

***விலங்கு சிங்கம், மான், புலி (காட்டு விலங்குகள்)***
***நாய், ஆடு,மாடு(வீட்டு விலங்குகள்)***
***தாவரம் மர வகைகள் - மா, பலா***
***செடி வகைகள் - பருத்தி, கத்தரி***
***கொடி வகைகள் -அவரை***

*இவ்வாறு விலங்கு, தாவரம் போன்ற மீச்சொற்கள் தமக்குள் கீழ்ச்சொற்களைக் (காட்டுவிலங்கு, வீட்டுவிலங்கு மரம்செடி, கொடி) கொண்டுள்ளதை அறியலாம். அகராதியியலார் காட்டும் இச்சொற்பாகுபாடு மரபிலக்கண நூல்கள் காட்டும் பொதுப்பெயர் (மக்கள்) சிறப்புப் பெயர் (ஆண்பெண்) என்ற பாகுபாட்டைச் சார்ந்ததாக உள்ளதை அறிய முடிகின்றது.*

*சொல்லுக்கும் அது குறிக்கும் பொருளுக்கும் இடையேயான தொடர்பு பொதுமையானது எனினும் பயன்படுத்தப்படும் சூழலுக்கு ஏற்ப சொற்பொருள் மாறும் தன்மை கொண்டதாக உள்ளது. உதாரணமாக. நல்ல என்ற பெயரடைச்சொல் பயன்படுத்தப்படும் சூழலுக்கு ஏற்ப பல பொருள்களைப் பெறுகின்றது.*

***நல்ல விளைச்சல் - மிகுதியான விளைச்சல்***
***நல்ல கூட்டம் - பெரும் கூட்டம்***
***நல்ல தலைவலி -கடுமையான தலைவலி***

*இச்சான்றுகள் ''நல்ல'' என்ற சொல்லின் பொருள் நெகிழ்வினைக்காட்டுவதாக உள்ளன. சொற்களின் இத்தன்மையினால் சொல்லுக்கும் பொருளுக்கும் இடையே இருவகையான தொடர்புகள் ஏற்படுகின்றன. அவை; ஒரு சொல் வடிவம் பல பொருள்களைக் கொண்டிருத்தல், பல வேறுபட்ட வடிவுடைய சொற்கள் ஒருபொருளைக் கொண்டிருத்தல். இவற்றுள், ஒருசொல் பல பொருள்களை ஏற்று வழங்குவதற்கு அகராதியியலார் பல காரணங்களை ஆராய்ந்துள்ளனர். மொழிச்*

சூழல், மாற்றம், சூழல் சிறப்பாக்கம், அணிநயப் பயன்பாடு, பிறமொழித்தாக்கம் போன்ற பல காரணங்களால் ஒருசொல் பல பொருள்களைப் பெறுகின்றது என்பது அகராதியியலார் கருத்தாகும். அவ்வகையில் பல வேறுபட்ட வடிவுடைய சொற்கள் ஒரே பொருளைப் பெறுவதற்கும் பல காரணங்கள் உள்ளன. அக்காரணங்களையும் அச்சொற்களின் பண்புகளையும் ஆராய்வது அவசியமாகின்றது.

## திருக்குறளில் ஒரு பொருட் பல சொற்கள்

நீதி இலக்கியமாக உலகப் புகழ் பெற்ற திருக்குறள் முப்பால் உலகப்பொதுமறை என்று பலவாறு சிறப்பிக்கப்படுகின்றது. பொய்யாமொழி அச்சிறப்புக்களுள் விரிந்த பொருளைக் குறுகிய வடிவத்தில் (7 சீர்களில்) தந்ததாகிய சிறப்பும் ஒன்றாகும். இந்நிலையில் குறளின் சொல்லாட்சி ஆராயத்தக்கது.

**துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்கு**
**துப்பாய தூவும் மழை**

என்ற குறள் துப்பு, தூவும், மழை ஆகிய மூன்றே சொற்களால் ஏழு சீர்கள் அமைய குறள் இயற்றியது வள்ளுவரின் சொல் ஆளுமையைக் காட்டுவதாக உள்ளது. மேலும் குறளில் இடம் பெறும் ஒரு பொருட் பல சொற்கள்பயன்பாட்டின்வழியும்வள்ளுவரின் சொல் ஆளுமை ஆராயத்தக்கது.

திருக்குறளில் ஒரு பொருளைக் குறிக்கும் பல பெயர்ச்சொற்கள் இடம் பெற்றுள்ளன. அறுபது பெயர்ச் சொற்கள் ஒவ்வொன்றும் இரண்டு முதல் பன்னிரண்டு வரையிலான ஒருபொருட்பன்மொழிகளைப் பெற்றுள்ளன. “இறைவன்” முதல் “நெறி” ஈறாக உள்ள அறுபது பெயர்ச்சொற்களைத் தலைமைச் சொற்களாகக் கொண்டு அவற்றுக்கான ஒருபொருட்பன்மொழிகள் ஆய்வு செய்யப் படுகின்றன. மரபிலக்கண நூல்கள் பெயர்ச் சொற்களை உயர்திணைப்பெயர், அஃறிணைப் பெயர், விரவுப்பெயர் என மூவகைப் படுத்தியுள்ளன. இவை பொருள், இடம், காலம், சினை, குணம் தொழில் எனும் ஆறு நிலைகளில் தோன்றுவதால் பொருட்பெயர், இடப்பெயர், சினைப்பெயர், காலப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் என மேலும் ஆறு வகைப்படுத்தப்பட்டுள்ளன. திருக்குறளில் காணலாகும் ஒருபொருட் பல பெயர்களும் இவ்வகைப்பாட்டின் அடிப்படையில் பகுத்தறியத் தக்கனவாக அமைகின்றன.

## பொருட்பெயர்கள்

திருக்குறளில் ஒரு பொருட்பன் மொழிகளாக இடம்பெற்றுள்ள பொருட் பெயர்களை உயர்திணைப் பொருட் பெயர்கள், அஃறிணைப் பொருட் பெயர்கள் என இருவகையாகப் பிரித்தறிய முடிகின்றது.

## உயர்திணைப் பொருட் பெயர்கள்

உயர்திணையாகிய இறைவன் மக்கள் மற்றும் மக்கள் எனும் பொதுப்பெயருள் அடங்கும் தாய், மன்னன் பெண் கணவன், மனைவி, காதலன், பகைவர், உறவினர் ஆகியோரைக் குறிக்கும் பல பெயர்கள் திருக்குறளில் ஆளப்பட்டுள்ளன.

## இறைவனைக் குறிக்கும் பெயர்கள்

திருக்குறளில் இறைவனைக் குறிக்கும் பதிமூன்று பெயர்ச்சொற்கள் இடம் பெற்றுள்ளன. அவையாவன: கடவுள் (அதிகாரத்தலைப்பு) தெய்வம் (கு.43,50) பற்றற்றான் (கு,350) வாலறிவன் (கு.2) உலகு இயற்றியான் (கு.1062) ஆதிபகவன் (கு.1) மலர்மிசை ஏகினான் (கு.3) இறைவன் (கு.10) வேண்டுதல் வேண்டாமை இலான் (கு.4) ஐந்தவித்தான் (கு.6) அறஆழி அந்தணன் (கு.8) எண்குணத்தான் (கு.9) தனக்குவமை இல்லாதான்(கு.7). இச்சொற்கள் யாவும் இறைவனின் பண்புகளைச் சுட்டும் பெயர்களாக அமைந்துள்ளன.

- பற்றற்றான் - உலகப்பற்று இல்லாதவன்
- வாலறிவன் - தூய, தெளிந்த அறிவினை உடையவன்
- மலர்மிசை ஏகினான் - அடியவரின் உள்ளக்கமலத்தில் சேர்பவன்
- வேண்டுதல் வேண்டாமை இலான் - விருப்பு வெறுப்பு அற்றவன்
- ஐந்தவித்தான் - ஐம்பொறி வழியான ஆசையை அறுத்தவன்

- *அறஆழி அந்தணன் - அறக்கடலாகிய அந்தணன்*
- *எண்குணத்தான் - எட்டு குணங்களை உடையவன்*
- *தனக்குவமை இல்லாதான் - நிகர் இல்லாதவன்*

*சிவன், விஷ்ணு, முருகன் என சமயம் சார்ந்த இறைப்பெயர்களைச் சுட்டாமல் இறைவனின் பலபண்புகளைக் குறிப்பதாகிய பெயர்களை வள்ளுவர் கையாண்டுள்ளமை இதன் வழி புலப்படுகிறது. மேலும் இச் சொற்கள் ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் இணைந்து தொடர்நிலையில் ஆக்கப்பட்ட சொற்களாக அமைந்துள்ளன. உதாரணமாக "மலர் மிசை ஏகினான்" என்ற பெயர்ச்சொல் மலர் + மிசை + ஏகினான் என்று மூன்று சொற்களின் சேர்க்கையால் ஆக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஒரு பொருள் பல சொல் உருவாவதற்குரிய காரணங்களுள் ஒன்று அப்பொருளின் பண்பு நிலை. ஒரு பொருளுக்குரிய பண்புகளின் பன்முகத்தன்மையால் அப்பொருளைச் சுட்ட பண்பு அடிப்படையிலான பல பெயர்கள் உருவாகின்றன என்பதை அறிய முடிகிறது. "பண்பு - பொறிகளால் உணரப்படும் குணம். ஒரு சொல் ஒரு குணத்தை உணர்த்தலேயன்றி ஒரு சொல் பல குணத்தையும் பல சொல் ஒரு குணத்தையும் உணர்த்தல் உண்டென்பர்."[3]*

**மக்களைக் குறிக்கும் பெயர்கள்**

*ஆண், பெண் ஆகிய இருபால்களுக்கும் பொதுப்பெயராகிய மக்களை மாந்தர் (கு. 452,999) உலகத்தார் (கு.294) மக்கள், மன்உயிர் (கு,457) எனும்பலபெயர்களால்திருக்குறளில் வள்ளுவர் வழங்கியுள்ளார். இவற்றுள் மன் உயிர் என்ற சொல் நிலைபெறும் உயிர் எனும் பொருளில் மக்களைக் குறிக்கும் சொல்லாக ஆளப்பட்டுள்ளது. உயிர் என்ற சொல் உலகில் வாழும் அஃறிணை, உயர்திணை ஆகிய அனைத்து உயிர்களையும் குறிக்கும் எனினும் "மனநலம் மன் உயிர்க்கு ஆக்கம்" என வள்ளுவர் அறிவுறுத்தும் நிலையில் அஃறிணை உயிர்களை ஒழித்து உயர்திணைகளுள் மக்களுக்கு ஆகி வந்துள்ளது. மாந்தர், மக்கள் ஆகிய பெயர்கள் அனைத்து மக்களையும் குறிப்பதாக திருக்குறளில் இடம்பெறுகின்றது. மாந்தர் என்ற சொல் "மாந்தல்" என்ற வினையிலிருந்து பிறந்த பெயர்ச்சொல்லாகக் கருத முடிகின்றது. பண்பு குணம், செயல் அடிப்படையில் ஒருபொருள் பல சொற்கள் ஆக்கம் பெறுவதுண்டு எனும் நிலையில் உண்ணல், குடித்தல், சாதல் எனும் பொருள்படும் "மாந்தல்"[4] (கதிரை வேற்பிள்ளை தமிழ்ச் சொல்லகராதி-ப.206) என்ற சொல்லின் வழி மாந்தர் என்ற பெயர் உருவாக்கப் பட்டுள்ளது. மக்கள் வாழ்வில் தவறாது நிகழும் செயல்பாடுகளைச் சுட்டும் விதமாகசுமாந்தல்" என்ற வினைச் சொல் அமைகின்றது. இவ்வினையை அடியாகக்கொண்டு உருவான மாந்தர் என்ற பெயர்,*

***நிலத்தியல்பான் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு***
***இனத்தியல்பது ஆகும் அறிவு***

*என்ற குறளில் ஆளப்பட்டுள்ளது. பெரியோரைத் துணைக்கோடல் அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள இக்குறள் மாந்தர் யாவர்க்கும் பொருந்தும் அறக்கருத்தை வலியுறுத்துகிறது. எனவே இச்சொல் திருக்குறளில் உரிய இடத்தில் பொருத்தமுற ஆளப்பட்டு வள்ளுவரின் சொல் ஆளுமைத் திறனுக்கு சான்றாக அமைகின்றது.*

*மக்களைக் குறிக்கும் பெயர்களுள் அந்தணர் என்ற சொல்லாட்சி திருக்குறளில் இடம்பெறுகின்றது. உயர்ந்த குறிக்கோளைக் கொண்டு உலக உயிர்கள் இன்புற்று வாழ உதவக் கூடியவர்களைத் தான் வள்ளுவர் அந்தணர் என்று ஜீவகாருண்யத்தைக் குறிப்பிடும் சொல்லால் கூறுகிறார். என்ற கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது. (ப.189) - சர்வதேசத் தமிழாய்விதழ் - திருக்குறளின் அறிவுசார் நோக்கும் போக்கும் - ம.சுப்பராயன், த. ஜெயக்குமார்* -Vol. 3 Iss. SPL 1Year *2021.*

**மன்னனைக் குறிக்கும் பெயர்கள்**

*மக்களை ஆளும் ஆட்சிப்பொறுப்பில் விளங்கும் மன்னனைச் சுட்டும் பெயர்களாக அரசர் (கு.381) வேந்தன் (கு. 382, 389, 390, 528) வேந்தர் (கு. 481, 689) மன்னன் (கு. 386, 448) மன்னவன் (கு. 388, 445, 558) நிலனாள்பவர் (கு. 383) வேலார், (கு.683) வேந்து, (கு.556, 551, 561...) வெங்கோலன் (கு.563) இறைவன் (கு. 690) இறை (கு. 432, 436, 564, 547) ஆகிய சொற்கள் திருக்குறளில் ஆளப்பட்டுள்ளன. இவற்றுள் மன்னன், மன்னவன் ஆகிய சொற்களும் வேந்தன் வேந்தர், வேந்து ஆகிய சொற்களும் சொல்லமைப்பில் வேறுபட்டனவாக ஆளப்பட்டுள்ளன. மன்னன் என்ற சொல் பெருமை உடையவன் 5 (க.அன்பழகன் - சிற்பி பாலசுப்பிரமணியன் (ப.ஆ) - ஆய்வுக்கோவை 2001 - ப.1591) என்ற பொருளை உடையது. இச்சொல்,*

***காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்***
***மீக்கூறும் மன்னை நிலம்***

*என்ற குறளில் பொருத்தமுற இடம் பெறுகின்றது. மன்னது பெருமையை உயர்விக்கும் பண்புகளை வள்ளுவர் இக்குறளில் கையாண்டுள்ளமை புலப்படுகிறது.நிலனாள்பவர் என்ற பெயர்ச் சொல் அரசனின் ஆட்சி செயல்பாட்டை மையமிட்ட சொல்லாக அமைகின்றது. வெங்கோலன் என்ற பெயர் செங்கோலாட்சி அன்றி கொடிய ஆட்சி புரிதலாகிய எதிர்செயலைக் குறிக்கும் சொல்லாக விளங்குகின்றது. அரசனுடன் போர் செய்வதாகிய நிலையில் வேலை ஏந்துபவன் ஆகையால் வேலார் என்ற பெயர் அரசனைக் குறிக்கும் சொல்லாக திருக்குறளின்கண் இடம் பெறுகின்றது. போர் செய்யுமிடத்து மன்னனின் கொடை முதலாகிய பண்புகளைக் காட்டிலும் வீரப்பண்பு ஓங்கியிருக்கும். எனவே வேலாருள் வென்றிவினை உரைப்பான் பண்பு என தான் கூறவரும் கருத்துக்குப் பொருந்தும் விதத்தில் இச்சொல்லை வள்ளுவர் கையாண்டுள்ளார். மேலும் இறை, இறைவன் என்ற சொல்லாட்சியின் காரணத்தை ஆராயுமிடத்து*

***உலகபாலர் உருவாய் நின்று உலகம் காத்தலான்***
***இறை***

*என்றார்[6] என பரிமேலழகர் கூறும் விளக்கத்தை அறியமுடிகின்றது. பரிமேலழகர் உ.ஆ. - திருக்குறள் பரிமேலழகர் உரை- ப.52*

***முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு***
***இறை என்று வைக்கப் படும்***

*என்ற குறளில் வள்ளுவர் முறைசெய்து காக்கும் மன்னனை இறைவனுக்கு நிகராகப் போற்றியுள்ளமை குறிப்பிடத் தக்கது. திருவுடை மன்னரைக்காணின் திருமாலைக் கண்டேனே (திருவாய்மொழி பாடல் 4,8) என்ற வரிகளும் இக்கருத்தை வலியுறுத்துகின்றன. திருக்குறளில் மன்னனைக் குறிக்கும் பெயர்ச்சொல்லாகிய என்ற சொல் மன்னனுக்குரிய இன்றியமையாப் பண்புகளைச் சுட்டும் இடங்களில் ஆளப்பட்டுள்ளது. அரசர் என்ற சொல்லுக்கு குலப் பிறப் புரிமையால் நாட்டை ஆள்பவர் என்று பெருஞ்சொல்லகராதி பொருள் தருகின்றது. குலப்பிறப்புரிமையால் நாட்டை ஆளும் அரசர் குலங்களான இட்சு வாகுகுலம், அரிகுலம், குருகுலம் நாதகுலம், உக்கிகுலம் ஆகிய ஐந்து குலங்களும் அரையர் குலம் என வழங்கப்பட்டன.7 (பெருஞ் சொல்லகராதி - ப.240)*

*“அரையர் என்ற சொல்லே பிற்காலத்தில் அரசர் என மருவி வந்துள்ளது என அறிய முடிகின்றது.*

**தாயைக் குறிக்கும் பெயர்கள்**

*திருக்குறளில் தாயைக் குறிக்கும் பெயர்களாக ஈன்றாள், (கு.923), அன்னை (கு.1147), தாய் (கு.69) ஆகிய சொற்கள் பயின்று வந்துள்ளன. இவற்றுள் ஈன்றாள் எனும் சொல் குழந்தையைப் பெற்றெடுத்தலாகிய தாயின் செயலை மையமிட்டு ஆக்கப்பட்ட சொல்லாக அமைகின்றது. சொல்தேர்வு தொடை நயத்துக்காக அமையலாம். 8 (க. இராசேந்திரன் - தமிழில் சொல்லாக்கம் - ப.256) எனும் கருத்தை அடிப்படையாகக் கொண்டால் ஈன்றாள் எனும் சொல் குறளில் எதுகை நயம்பட*

ஆளப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது. இச்சொல் இடம் பெறும்

**ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க**
**சான்றோர் பழிக்கும் வினை**

என்ற குறளில் எதுகைநயம் புலப்படுகின்றது.

### பெண்ணைக் குறிக்கும் பெயர்கள்

திருவள்ளுவர் பெண்ணைச் சுட்டும் இடத்து மகளிர் (கு.822, 912, 918, 974) பெண்டிர் (கு. 58. 913) மாதர் (கு.1081. 1087) ஒண்தொடி (கு.1101) பைந்தொடி (கு.1234,1238)பேதை (கு. 1106, 1239) மடந்தை (கு.1116.1122) சேயிழை (கு. 1110) ஆயிழை (கு.1124) அரிவை (கு.1107) தொடியார் (கு.911) மாணிழையார் (கு.919, 1114) பெண் (கு. 54, 56, 402, 902, 909) ஆகிய பெயர்களைக் கையாண்டுள்ளார். பேதை. பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்று பருவந்தோறும் பெண்கள் ஒவ்வொரு பெயரால் வழங்கப்படுவதுண்டு. அவற்றுள் பேதை, மடந்தை அரிவை ஆகிய சொற்கள் காமத்துப்பாலில் இடம்பெறும் புணர்ச்சி பழகுதல் நலம் புனைந்துரைத்தல் ஆகிய அதிகாரங்களில் குறிப்பிடப்படுகின்றன. மடந்தை என்ற பெண்பாற் பெயர் எழுபருவ மகளிருள் 16-20 வரையிலான வயதிற்குட்பட்ட பெண்களைக் குறிப்பது. இப்பெயர்ச்சொல் நலம் புனைந் துரைத்தல் அதிகாரத்தில் பொருத்தமுற ஆளப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது. மேலும் பெண்களின் அறியாமைப் பண்பை மையமிட்ட சொல்லான பேதை என்ற சொல் புணர்ச்சி மகிழ்தல் மற்றும் உறுப்பு நலன் அழிதல் ஆகிய அதிகாரங்களில் ஆளப்பட்டுள்ளன.

இவ்வாறு தகுந்த இடங்களில் சரியான சொல்லைப் பயன்படுத்தியுள்ளமை வள்ளுவரின் சொல்லாட்சித்திறனை உணர்த்துகின்றது.

ஒண்தொடி பைந்தொடி, சேயிழை, ஆயிழை இலங்கிழாய், மாணிழையார் ஆகிய சொற்கள் பெண்களின் அணிகலனகள் இழைக்கப்பட்ட தோற்றத்தை வெளிப்படுத்தும் சொற்களாக விளங்குகின்றன. மேலும் மகளிர், பெண் பெண்டிர் மாதர் ஆகியன பெண்களைக் குறிக்கும் பொதுப்பெயர்களாக அமைகின்றன. வரைவில் மகளிர் பெண்வழிச்சேறல் ஆகிய அதிகாரங்களில் இச்சொற்கள் எடுத்தாளப்பட்டுள்ளன.

### உறவுமுறை அடிப்படையில் அமைந்த பெயர்கள்

திருக்குறளில் கணவன், மனைவி, பகைவர் உறவினர் ஆகிய உறவுப் பெயர்களுக்குப் பல பெயர்ச்சொற்களைக் காண முடிகின்றது. கணவனைக் குறிக்க கேள் (கு.1222) கொண்கன் (கு. 1266, 1265) (கண்அன்ன) கேளிர் (கு.1267) மணந்தார், கொழுநன், காதலர், நயந்தவர் ஆகிய சொற்கள் திருக்குறளில் ஆளப்பட்டுள்ளன. இவற்றுள் கணவனைக் குறிப்பதாகிய கொழுநன், காதலர் ஆகிய சொற்கள் இன்று பொருள் மருவி வழங்குகின்றன. "கொழுநன்" என்ற சொல் கணவனை அன்றி கணவனின் சகோதரரைக்குறிக்கும் சொல்லாகவும் "காதலர்" என்ற சொல் களவு வாழ்வில் ஒரு பெண்ணைக் காதல்செய்யும்

ஆணைக்குறிக்கும் பெயராகவும் வழங்கப்படுகிறது. காலந்தோறும் சொற்கள் பொருள் மாற்றம் கொள்ளும் என்பதற்குத் தக்க சான்றாக இச்சொற்கள் அமைந்துள்ளன. பகைவரை உணர்த்தும் பெயர்களாக வள்ளுவர் ஒன்னார் (608, 756, 827, 828) செறுநர் (421, 488) மாற்றலர் (749) செற்றார் (1097, 1245) தெவ்விர் (639, 771) செயிர்ப்பவர் (880) ஆகிய சொற்களை திருக்குறளில் பயன்படுத்தியுள்ளார். காங்கேயரால் இயற்றப்பட்ட உரிச்சொல் நிகண்டில் பகைவரைக் குறிக்கும் பெயர்களாக, மன்னாதார், மாற்றார், மருவலர், வேண்டார், அடையார், இன்னாதார், கூடார், இகலினார், ஒன்னாதார், செற்றார், அமித்திரர், சேரார், நண்ணார், செறுநர், பற்றார், பரர் ஆகியன இடம்பெற்றுள்ளன. இதன்வழி தெவ்விர், செயிர்ப்பவர் ஆகிய பெயர்ச்சொற்கள் திருவள்ளுவரால் புதுமையாக ஆளப்பட்டுள்ளமையை அறிய முடிகின்றது.

உறவினரைச் சுட்டும் பெயர்களாக தமர் (கு. 444, 529,881, 1300) சுற்றத்தார்

*(கு. 521, 584) கிளைஞர் (கு.796) உற்றார் (கு. 1097) சுற்றம் (கு.522) ஆகியன திருக்குறளில் அமைந்துள்ளன. இவற்றுள் தமர் சுற்றத்தார் சுற்றம் ஆகிய சொற்கள் உறவினர்களைக் குறிப்பதாகவும் கிளைஞர், உற்றார் ஆகிய சொற்கள் நட்பால் உறவு கொண்டோரைக் குறிக்கும் பெயர்களாகவும் அமைகின்றன. இல்லாள் (கு. 52, 900, 905, 906) மனை (கு. 60,901) மனையாள் (கு.4) நுதலாள் (கு. 905) ஆகிய பெயர்ச்சொற்கள் மனைவியைச் சுட்டும் பெயர்களாக திருக்குறளில் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் மனை என்ற சொல் ஆகுபெயராக மனைவியைக் குறித்து வந்துள்ளது. இல்லாள், மனையாள் ஆகிய பெயர்கள் இல்லறப் பணிகளை இல்லத்திலிருந்து மேற்கொள்பவள் என்பதைத் தெளிவுறுத்துவனவாக அமைந்துள்ளன. நுதலாள் என்ற பெயர் தோற்றத்தை மையமிட்ட சொல்லாக அமைகின்றது. மனைவியைக் குறிக்கும் இப்பெயர்ச் சொற்கள் பெண்வழிச்சேறல் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ளன.*

***9. காங்கேயர் உரிச்சொல் நிகண்டு - ப.5***

***ஒப்புமைக்கான பண்புப் பெயர்கள்***

*திருக்குறளில் ஒப்பர் (கு.413) அனையர் (410) தகைய (கு.418)ஆகிய சொற்கள் ஒப்புமைக்கான பெயர்ச்சொற்களாக அமைந்துள்ளன. இச்சொற்கள் சொல்லமைப்பில் வேறுபட்டு ஒரேபொருளைக் குறிக்கும் சொற்களாக விளங்குகின்றன.*

## பேயைக்குறிக்கும் பெயர்கள்

*அணங்கு (கு.918, 1081) அலகை (கு. 50) பேய் (கு. 365) ஆகிய மூன்று சொற்கள் பேயைச் திருக்குறளில் பயின்றுவந்துள்ளன. இவற்றுள் அலகை, பேய் எனும் சொற்கள் பொருள் வேற்றுமை காண இயலா வண்ணம் அமைந்துள்ளன. "அணங்கு" என்ற சொல்லுக்கு பரிமேலழகர் காம நெறியான உயிர்கொள்ளும் தெய்வமகள்10 என்று பொருள் தருகின்றார். இச்சொல்,*

***ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கு என்ப***
***மாய மகளிர் முயக்கு***

*என்று குறளில் ஆளப்பட்டுள்ளது. பேய், அலகை ஆகிய சொற்கள் முறையே இன்னா முகத்தாள் பெற்றசெல்வம் பேய் பெற்ற செல்வம் எனக் கூறுமிடத்தும் புல்லறிவாளனைப் பேய்க்கு ஒப்புமைப்படுத்தும் இடத்தும் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

## தொகுப்புரை

*காலந்தோறும் ஒருபொருட் பன்மொழிகள் ஆக்கப்படுகின்றன. இலக்கியங்களில் இவை அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. திருக்குறளில் பயின்று வந்துள்ள ஒருபொருட் பலசொற்களை ஒரு பொருட்பல பெயர்கள், ஒருபொருட் பலவினைகள் என பிரித்தறிய முடிகின்றது. திருக்குறளில் "இறைவன்" முதல் "நெறி" ஈறான அறுபது தலைமைப்பெயர்ச் சொற்களுக்கு இரண்டு முதல் பதிமூன்று வரையிலான ஒரு பொருட் பன்மொழிகள் இடம் பெற்றுள்ளன. ஒரு பொருட் பன்மொழிகளாய் இடம் பெறும் சில பெயர்ச்சொற்கள் பொருள் வேறுபாடு காண இயலா வண்ணம் ஒற்றுமையுடைய சொற்களாக விளங்குகின்றன. (சான்று, பூ, மலர், இறைவன், கடவுள்) இவை மேலும் ஆராய்ச்சிக்குரியன.*

*உயர்திணை பொருட்பெயர்களில் ஒரு பொருளைக் குறிக்கும் பல பெயர்ச் சொற்கள் பொருள் நிலையில் வேறுபாட்டை புலப்படுத்துகின்றன. ஒன்றன் பண்பு, செயலை, மையமிட்டு ஆக்கப்பட்ட இப்பெயர்கள் விரிந்த நிலையில் ஒரு பொருளை உணர்த்துகின்றன. பொருள்நிலையில் மட்டும் அன்றி சொல்ல மைப்பிலும் ஒரு பொருட் பல பெயர்கள் வேறுபடுகின்றன. திருக்குறளில் இறைவனைக் குறிக்கும் பெயர்கள் கூட்டுநிலையில் பண்பை மையமிட்டு ஆக்கப்பட்ட சொற்களாக விளங்குகின்றன. அவை எண்குணத்தான், மலர்மிசை ஏகினான், ஐந்தவித்தான், வேண்டுதல் வேண்டாமை இலான். பொருள் வேறுபாடு புலப்படுத்தாத ஒரு பொருட் பல பெயர்கள் எதுகை நயத்துக்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. சான்று : ஈன்றாள் திருக்குறளில் ஒரு பொருட் பல பெயர்கள் ஆளப்பட்டுள்ள விதம் வள்ளுவரின்*

*சொல்லாட்சித் திறனை வெளிப்படுத்துகின்றது. வள்ளுவர் தான் கூற வரும் கருத்துக்கு ஏற்ற சொற்களைத் தேர்ந்து பயன்படுத்தியுள்ளமை புலனாகின்றது.*

**துணைநூற்பட்டியல்**


1. *க. அன்பழகன்., சிற்பி பாலசுப்பிரமணியன் (ப.ஆ)., ஆய்வுக்கோவை 2001., ப.1591.*
2. *க. இராசேந்திரன்., தமிழில் சொல்லாக்கம்., ப.256*
3. *கதிரை வேற்பிள்ளை., தமிழ்ச் சொல்லகராதி., ப.206*
4. *காங்கேயர்., உரிச்சொல் நிகண்டு ., ப.5*
5. *எச். சித்திரபுத்திரன்., தமிழ்ச்சொற் பொருண்மையியல்., ப.36*
6. *பரிமேலழகர் உ.ஆ., திருக்குறள் பரிமேலழகர் உரை., ப.52*
7. *வெள்ளைவாரணர்., தொல்காப்பியம் நன்னூல்., தமிழ்ப் பல்கலைக்கழகம்., தஞ்சாவூர், 1984*
8. *மு. வரதராசன்., மொழிநூல., ப.68*
9. *பெருஞ்சொல்லகராதி, ப.240*
10. *த. ஜெயக்குமார், திருக்குறளின் அறிவு சார் நோக்கும் போக்கும், சர்வதேசத் தமிழாய்விதழ்,* vol. 3, Iss. SPL 1Year *2021.*